**செய்தி வெளியீடு எண் : 257** **நாள்:24.02.2022**

**<u>தென்னை விவசாயிகளின் நலனுக்காக குறைந்தபட்ச ஆதரவு விலையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக தேங்காய் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது தொடர்பான பத்திரிக்கைச் செய்தி</u>**

வேளாண் உற்பத்திக்கு பல்வேறு வழிகளில் விவசாயிகளுக்கு உதவுவது போன்று, விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு இலாபகரமாக விலை கிடைப்பதற்கும், தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் வரத்து அதிகமிருப்பதால், அப்போது ஏற்படும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். இத்தருணங்களில் ஒன்றிய அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல், உளுந்து, பாசிப்பயறு மற்றும் கொப்பரை போன்ற விளைபொருட்களை அரசே விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, விவசாயிகளின் நலனை பாதுகாத்துவருகிறது.

தமிழ்நாட்டில் 4.39 இலட்சம் எக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. தென்னை விவசாயிகள் இளநீர், தேங்காய் போன்ற விளைபொருட்களாக மட்டுமல்லாது, தேங்காய்களை உலரவைத்து, மதிப்புக்கூட்டி கொப்பரைகளாகவும் விற்பனை செய்து வருகின்றனர். 2022 ஆம் ஆண்டிற்கான கொப்பரை பருவத்திற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையாக, பந்துக் கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.110ம், அரவைக் கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.105.90ம் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. எனினும், வெளிமார்க்கெட்டில், கடந்த சில நாட்களாக, தேங்காய் கொப்பரைகளின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட மிக குறைவாக இருந்து வந்தது.

எனவே, தென்னை விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசு, தேங்காய் கொப்பரைகளை குறைந்தபட்ச ஆதார விலையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திட உரிய கருத்துருவினை ஒன்றிய அரசுக்கு அனுப்பி, அதற்கான ஒப்புதலினையும் பெற்றுள்ளது.

அதன்படி, நமது மாநிலத்தில் **கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாமக்கல், தருமபுரி, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய தென்னை அதிகம் சாகுபடி**

**செய்யப்படும் 21 மாவட்டங்களில் உள்ள 42 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் 50,000 மெட்ரிக் டன் அரவைக் கொப்பரையாகவும், 1000 மெட்ரிக் டன் பந்துக் கொப்பரையாகவும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ், பந்துக் கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.110ம், அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.105.90ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்படும்.**

எனவே, இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் தென்னை விவசாயிகள், தங்களுக்கு அருகில் உள்ள கொள்முதல் நிலையங்களை அணுகி, நிலச் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் நகல்களுடன் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம். விவசாயிகள் கொள்முதலுக்கான கொண்டுவரும் கொப்பரை, நாஃபெட் நிறுவனம் பரிந்துரைக்கும் குறைந்தபட்ச தரத்தில் இருத்தல் அவசியமாகும்.

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் இத்திட்டத்திற்கு மாநில முகமையாக செயல்படுகின்றது. சேமிப்புக் கிடங்குகளில் கொப்பரைக் குவியல்கள் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள், விவசாயிகள் வழங்கிய கொப்பரைக்கான தொகை அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

எனவே, தென்னை விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இந்த விலை ஆதரவுத் திட்டத்தில் பங்குகொண்டு, கொப்பரைத் தேங்காய்க்கு குறைந்தபட்ச ஆதரவு விலையினை பெற்று, பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வேளாண் உற்பத்தி ஆணையர் (ம) அரசுச் செயலர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**